

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 25 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும் மொத்தம் 33 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 43.20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (24.10.2025) திருவாரூர் மாவட்டம், திருக்கறைவாசல் கிராமத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் என். கௌதமன், தாட்கோ தலைவர் இளையராஜா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக

# ரூ.4.05 கோடியில் 45 புதிய வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, அக். 26 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம், தாய் சேய் சுகாதார சேவைகள், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், தொற்று அல்லாத நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், சுகாதார நடவடிக்கைகள் போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

அரசின் திட்டங்களை செயல்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு தரமான மற்றும் பயனுள்ள பொது சுகாதார சேவைகளை வழங்குவதில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் அனைத்து நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு நடவடிக்கைகளையும் பொருத்தமான திட்டமிடல், திறம்பட செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் மூலம் மாவட்டங்களில் சுகாதார இலக்குகளை அடைவதில் மாவட்ட சுகாதார அலுவலர்கள் முக்கிய பொறுப்பு வகிக்கின்றனர்.

மாவட்ட சுகாதார அலுவலர்கள் நோய் கண்காணிப்பு பணிகள், ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வு, வட்டார அளவிலான ஆய்வு கூட்டம் மற்றும் இதர கள ஆய்வு போன்ற பணிகளை தினந்தோறும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்கு வாகனம் இன்றியமையாததாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சுகாதார திட்ட நிதியின் கீழ் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு. சு.வினீத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் மரு.எ.சோமசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில்

# வடகிழக்குப் பருவமழையின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்!

## நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

**சென்னை, அக்.26 -**

**நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்கே.என்.நேருதலைமையில்தமிழ்நாடுகுடிநீர்வடிகால் வாரியத்தின் சார்பில் வடகிழக்குப் பருவமழையின் போதுமேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்த ஆய்வுக்கூட்டம்சென்னைஎம்.ஆர்.சி. நகரில்உள்ளநகராட்சி நிருவாக இயக்குநரகத்தில் நேற்று முன்தினம் (24.10.2025)நடைபெற்றது.**



*தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின்மூலம்562 கூட்டுக்குடிநீர்திட்டங்கள் வாயிலாக 16 மாநகராட்சிகள், 72 நகராட்சிகள், 327 பேரூராட்சிகள்,47,465ஊரகக் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்குவடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவான 2,757மில்லியன்லிட்டருக்கு நாளொன்றுக்குசுமார்2,248 மில்லியன்லிட்டர்பாதுகாக்கப்பட்டகுடிநீர்5.28கோடி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.*

*தற்போது பெய்த வடகிழக்குபருவமழையினாலும், ஆற்றங்கரைகளில்ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் பாதிக்கப்பட்டகூட்டுக்குடிநீர் திட்டங்களின் நிலை குறித்து அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். பாதிக்கப்பட்ட89கூட்டுக்குடிநீர்திட்டங்களில், 56 திட்டங்கள் சரிசெய்யப்பட்டு, மீதமுள்ள 33 திட்டங்களை சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை போர்க்கால அடிப்படையில் சரி செய்து மக்களுக்கு வடிவமைக்கப்பட்ட அளவை வழங்க அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும்,பருவமழைக்காலங்களில்முன்னெச்சரிக்கைநடவடிக்கையாக போதிய கிருமினாசினிகளை (குளோரின்)பயன்படுத்துதல்,டீசல் ஜெனரேட்டர்களை தயார் நிலையில் வைத்தல், குழாய் பழுதுகள் மற்றும் வெடிப்புகளைஉடனடியாகசரிசெய்தல்,உள்ளாட்சி அமைப்புகளோடு அலோசனை செய்தல் போன்றவற்றை மேற்கொண்டு மக்களுக்கு வடிவமைக்கப்பட்டகுடிநீர் அளவினை வழங்குமாறு ஆலோசனை வழங்கினார்கள்.*

*மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம்31கூட்டுக்குடிநீர்திட்டங்கள்மற்றும்10பாதாளச் சாக்கடை திட்டங்களின் பணி முன்னேற்றங்களின் நிலை குறித்து அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேற்காணும் திட்டங்கள் குறித்த காலத்திற்குள் பயனுக்கு கொண்டுவரவும், பொதுமக்களுக்குபாதுகாக்கப்பட்டகுடிநீர்வழங்கவும் அறிவுரை வழங்கினார்.*

*இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், முனைவர் தா.கார்த்திகேயன், அரசு சிறப்பு செயலாளர், சு.கணேஷ், இயக்குநர், நகராட்சி நிருவாகம் ப.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடுகுடிநீர்வடிகால்வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். ஜி.எஸ். சமீரன், இயக்குநர்,பேரூராட்சிகள், மா.பிரதீப் குமார், தமிழ்நாடுகுடிநீர்வடிகால்வாரிய இணைமேலாண்மைஇயக்குநர் ஆனந்த் மோகன், வாரியபொறியியல்இயக்குநர், வி.சண்முகராஜா, வாரியத்தின் தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள்,நிருவாகப் பொறியாளர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# திருவாரூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு!

*திருவாரூர், அக். 26 -*

*திருவாரூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ , தாட்கோ தலைவர் என். இளையராஜா, வை.செல்வராஜ் எம்.பி., கே.மாரிமுத்து எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், நகர செயலாளர் வாரை. பிரகாஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, , வேளாண்மை இயக்குனர் பா.முருகேஷ், ஆகியோர் உடனிருந்தனர்.*

*பின்னர் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது...*

*இன்றைய தினம், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிடப்பட்டது. சில வயல் பகுதிகள் மழைநீரால் சூழப்ப ட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை கண்டறியும் வகையில் கணக்கெடுக்கும் பணியினை விரைவுப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*நெல் உற்பத்தியை பொறுத்த வரையில் கடந்தாண்டை விட மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணை குறிப்பிட்ட நேரத்தில் திறந்து வைக்கப்பட்டதாலும்;, தமிழ்நாடு முழுவதும் 276 கோடி குறுவை தொகுப்பு வழங்கப்பட்டுள்ளதாலும், நான்கு ஆண்டு காலத்தில் கூடுதலாக 1 லட்சத்து 84 ஆயிரம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாலும் விவசாயம் பெரும் வளர்ச்சியடைந்து அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், விவசாயத்தில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.*

*வானிலை நிலவரத்தை கருத்தில் கொண்டு, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் வழக்கமாக அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்படும் நெல கொள்முதல் 2022ம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. மேலும், கடந்த 3 ஆண்டுகளில் செப்டம்பர் மாதம் துவங்கிய கொள்முதலில் இதுவரை நடப்பாண்டில் அதிகளவாக 9.67 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*

*கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தமிழகம் முழுவதும் இதுவரை 808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக திறக்கப்பட்டு மொத்தமாக 1819 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருவதுடன், நாள்தோறும் கொள்முதல் நேரம் மாலை 6 மணி வரை இருந்த நிலையில் இரவு 8 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், தமிழக அரசு ரூ.1959 கோடி ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. நெல் கூடுதலாக விளைந்த காரணத்தினால், கொள்முதல் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு நெல் முறையாக பாதுகாக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுவருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சி மற்றும் டி வாய்க்கால் தூர்வாரும் பணி 8 ஆயிரத்து 371 கி.மீ., அளவிற்கு தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், 2 ஆயிரத்து 355 கி.மீ மட்டுமே தூர்வாரப்படவுள்ளது.*

*தற்போது தனியார் நிறுவனங்கள் நெல் கொள்முதல் செய்வதில்லை. அரசாங்கமே நேரடியாக நெல்லினை கொள்முதல் செய்துவருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாள் ஒன்றுக்கு கொள்முதல் 800 மூட்டையிலிருந்து 1000 மூட்டையாக உயர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதோடு விவசாயிகளின் கோரிக்கையினை யேற்று ஒரு ஏக்கருக்கு 60 மூட்டையிலிருந்து 70 மூட்டையாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.*

*அமைச்சரின் இந்த ஆய்வின்போது அரசு அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் உடன் பங்கேற்றனர்.*

*தொடர்ந்து திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் இரயில் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் வெளிமாவட்டங்களுக்கு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவருவதையும், வலங்கைமான் வட்டம், நார்த்தங்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் செய்தியாளர் களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்கள்.*

*அப்போது "திருவாரூர் மாவட்டத்தில், குறுவை அறுவடை 80 சதவீதம் முடிந்து விட்டது. ஏறக்குறைய 1 லட்சத்து 96 ஆயிரம் மெ.டன் நெல் கொள்முதல்செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் 10,000 மெ.டன் நெல் ஐந்து இரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் மன்னார்குடி பகுதியில், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி ஆகிய 3 இரயில் பகுதியிலிருந்து 6 ஆயிரம் மெ.டன் நெல் அனுப்பி வைக்கப்பட்டுவருகிறது. மேலும், 154 லாரிகளில் ஏறத்தாழ 100 லாரி வந்துள்ளது. 50 லாரி வந்து கொண்டுள்ளது. நாளையும் நான்கு ரயில் மூலம் அனுப்ப அனுமதி பெறப்பட்டு, இதன்மூலம் 8000 மெ.டன் நெல் அனுப்பபடும். மேலும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் முறையாக பாதுகாக்கப்பட்டு, போர்கால அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 8000 முதல் 10000 மெ.டன் வரை இயக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.*

*மாவட்ட ஆட்சியரின் இந்த ஆய்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.*

### கன மழையால்

# பவானிசாகர் தொகுதியில் ஏற்பட்ட பாதிப்புகள்!

## மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் ஆய்வு செய்தார்!

*ஈரோடு, அக். 26 -*

*தமிழ்நாடு முதலமைச்சரும் , கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு வடக்கு மாவட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஆய்வு செய்தார்.*

*ஈரோடு வடக்கு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியில் மிக கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி, உடனடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*கனமழையால், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள தரைப் பாலங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. மக்களின் போக்குவரத்தைப் பாதிக்காத வண்ணம், பாதிக்கப்பட்ட பகுதிகளை துரிதமாகச் சீரமைக்க மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் குன்றி ஊராட்சி: அஞ்சனை பிரிவு பள்ளத்தில் இருந்து குன்றி செல்லும் சாலையில் சேதமடைந்த இரண்டு தரைப்பாலங்கள்*

*குத்தியாலத்தூர் ஊராட்சி: சின்னசாலட்டி தரைப்பாலம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது.*

*குத்தியாலத்தூர் ஊராட்சி: அசகட்டி கோம்பை தரைப்பாலம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது.*

*குத்தியாலத்தூர் ஊராட்சி: ஏரியூர் தரைப் பாலம் மழை வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உடனிருந்து நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தினர். அதுபோது, சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர்ஐ.ஏ.தேவராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.*

### கும்பகோணம் தேவனாஞ்சேரியில்

# ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்றக் கட்டிடம்!

## சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

*தஞ்சாவூர், அக். 26 -*

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ30 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட பணிக்கு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டினார்.*

*உடன் கும்பகோணம் மத்திய ஒன்றிய செயலாளர் டி.கணேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், பகுதி செயலாளர் ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாமிநாதன்,விஜயலட்சுமி மற்றும் ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில், 100 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறவிருக்கும், கரூர், திருக்காம்புலியூர், அருள்மிகு லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோவில் குடமுழுக்கு விழா திருப்பணிகள் குறித்தான ஆய்வுக் கூட்டத்தில் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி கலந்துகொண்டு ஆலோசனை நடத்தினார்.